**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Transience and Psychic Control in *Naladiyar*

**A. Adison,** PhD Scholar, Tamil Department, Pondicherry University, Pondicherry.
**ORCiD: https://orcid.org/0000-0002-5292-9597**
**DOI: 10.5281/zenodo.6619126**

## Abstract

*Tamil literary canon reserves a distinct place for ethical writings of which "Naladiyar" is the most significant one. Though both "Naladiyar" and "Thirukkural" seem parallel in their treatment of several virtues, the theme of transience is talked about in a more detailed manner in "Naladiyar". Reading the "Naladiyar" songs dealing with the theme of Transience in-depth, they are meant to curb the human mind of its evil thoughts and feelings. Only When the theme of human transcience is instilled in the mind, human society will try to indulge in ethical deeds, and will not go against ethics. People will try to detach themselves from internal feelings such as greed for wealth, youth, and body, extreme lust and egocentricity. Thus, one could shield oneself from these bad psychic qualities and could follow the correct standards of life. "Naladiyar" verses of Transience have been written with such a telescopic view. This paper attempts to explain it with textual evidence.*

**Keywords:** *Naaladiyar*, Liveness, Body, *Thirukkural*, Physiology.

## References

[1] Ravichandhiran Thi. Ku., *Sigmund Freud Ulapagupaaivu Ariviyal*, Alaigal Veliyeetagam, Chennai, 2007.
[2] Ravichandhiran Thi. Ku., *Oru Freudian Paarvaiyil Thamil Naatupura Valakaarugal*, Alaigal veliyeetagam, Chennai, 2011.
[3] Somasundharam O., Jeyaramakrishnan Thi., Mananoyum Indraiya Maruthuvamum, New Century Book House, Chennai, 2017.
[4] *Naladiyar*. Moolamum Uraiyum, Saradha Pathipakam, Chennai, 2006.
[5] *Piralvu Nilai Ulaviyal*. Kaavya Veliyeedu, Chennai, 2018.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# நாலடியார் நிலையாமை தத்துவத்தில் உளக்கட்டுப்பாடு

**ஆ. அடிசன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.
ORCiD: https://orcid.org/0000-0002-5292-9597
DOI: 10.5281/zenodo.6619126

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் இலக்கிய வரலாற்றில் அற இலக்கியங்களுக்கு ஒரு தனித்த இடம் உண்டு. அதில் நாலடியார் குறிப்பிடத்தக்க நூலாகும். திருக்குறளோடு ஒத்த தன்மையுடைய பல அறங்கள் இதில் பேசப்பட்டாலும் நிலையாமை குறித்த சிந்தனை சற்று விரிவான நிலையிலேயே பேசப்பட்டுள்ளது. இந்த நிலையாமை பற்றிய அறம் உரைக்கும் பாடல்களை ஆழமாக வாசிக்கும்போது அவை மனிதனுடைய மனதில் உள்ள சில தவறான உணர்வுகளைக் கட்டுக்குள் வைத்துக்கொள்ளும்படி உரைப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில், அப்போதுதான் இந்த நிலையாமை கருத்தியலை உள்வாங்கும் மனித சமூகம் அறத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்யாமல் அறம் சார்ந்த செயல்களைச் செய்ய முற்படும். குறிப்பாக, செல்வம், இளமை, யாக்கை (உடல்) போன்றவை மீது உள்ள பேராசை, அதீத மோகம், தான் என்ற அகங்காரம் முதலான மனவெழுச்சிகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொண்டு சரியான வாழ்வியலை மக்கள் பின்பற்றுவார்கள். இத்தகைய தொலைநோக்குப் பார்வையுடன் நாலடியாரில் உள்ள நிலையாமை கருத்துக் கொண்டு பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன என்பதனை இந்த ஆய்வுக் கட்டுரை நில எடுத்துக்காட்டுகளுடன் விளக்க முயன்றுள்ளது.*

**திறவுச்சொற்கள்:** நாலடியார், நிலையாமை, யாக்கை, திருக்குறள், உளவியல்

**முன்னுரை**

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்குத் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல். இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இதனால் இந்த நூலுக்கு நாலடி நானூறு எனவும் மற்றொரு பெயர் உண்டு. இந்நூல் சிறப்பான அறங்களை போதிப்பதால் உலகப் புகழ்பெற்ற திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றது. நீதியை உரைப்பதில் திருக்குறளும் நாலடியாரும் கிட்டத்தட்ட ஒரே முறையையே கையாளுகின்றன. திருக்குறளைப் போன்றே நாலடியாரும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. மேலும் நாலடியார் வாழ்க்கைக்குத் தேவையான முக்கியமான தத்துவங்களை உவமை வடிவில் கூறி விளக்குவதில் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. இந்நூலின் சிறப்பை உணர்ந்த ஜீ. யூ. போப் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். நாலடியாரைத் தொகுத்தவர் பதுமனார் என்றும் உரை எழுதியவர் தருமர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இந்நூலில் உள்ள நானூறு பாடல்களும் மனிதச் சமூகத்திற்கு தேவையான நல்லொழுக்கங்களை உரைத்துள்ளது. குறிப்பாக உவமை குறியீட்டுத் தன்மை மூலமாக மனித மனதைப் பக்குவபடுத்த நாலடியார் பாடல்கள் முயன்றுள்ளது. ஏனெனில், ஒரு கருத்தை மட்டும் கூறி இதைக் கடைபிடியுங்கள் என்று கூறுவதை விட

மக்கள் மனம் தீமையான செயல்களைச் செய்ய தயங்கும் அளவிற்கு நாலடியாரின் அறம் வலியுறுத்தும் போக்கு அமைந்துள்ளது.

குறிப்பாக அறத்துப்பாலில் உள்ள முதல் மூன்று அதிகாரங்களாவன செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை ஆகியன மனித மனதைப் பக்குவப்படுத்த உள மருத்துவம் சார்ந்த நிலையைக் கையாண்டுள்ளது. எவ்வாறெனில் மனித மனமானது இயல்பாகவே தான் விரும்பும் எதுவும் தனக்குக் கிடைத்திட வேண்டும் என்பதிலும், அது தனக்கு மட்டுமே நிலையாக இருக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கக் கூடியது. அவற்றில் பெரும்பான்மை செல்வம் தொடர்பானதும், உடல் சார்ந்த தேவைகள் மற்றும் இளமைக்கான தேடல்கள் தொடர்பாகவே இருக்கின்றன. இது போன்ற மனித மனதின் பேராசை தேடல்கள் பொருட்டே மனிதன் பெரும்பாலான தீமைகளைச் செய்கின்றான். எனவே இத்தகைய அவா சார்ந்த தேடல்களால் கிடைப்பவை எதுவுமே நிலையற்றவை என்பதை உரைத்து, இதன் பொருட்டு 'பாவம் செய்வதைத் தவிர்த்திடுவீர்' என மனிதச் சமூகத்திற்கு நாலடியார் பாடல்கள் அறம் உரைக்கின்றன.

**செல்வம் நிலையாமையில் உளக்கட்டுப்பாடு**

செல்வம் நிலையாமை குறித்துப் பத்துப் பாடல்கள் இந்நூலின்கண் அமைந்துள்ளன. அவற்றுள், ஒரு பாடலினைச் சான்றாக எடுத்துக்கொண்டு உளக்கட்டுப்பாடு சிந்தனையை விரிவாகக் காணலாம்.

**துகள்நீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்**
**பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க**
**அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்**
**சகடக்கால் போல வரும் (நாலடி. 2)**

செல்வம் நடுவுநிலையாமை பொருந்த யாரிடத்திலும் நிற்காமல் வண்டியின் சக்கரம் போல கீழ் மேலாகவும், மேல் கீழாகவும் மாறிவரும். ஆதலால் குற்றமற்ற பெரிய செல்வமானது உண்டானால் அது தொடங்கி எருமை தடாக்கல் உழைத்தனா லுண்டாகிய சோற்றை ஏழைகள் பலரோடு கூடி உன்ன கடவர்கள் செல்வம் தோன்றியவர்கள். (நாலடியார் உரை - சாரதா பதிப்பகம். பக். 6)செல்வமானது நடுவு நிலையாமை சரியாகக் கடைபிடிக்கக் கூடியது. அதனால் அது யாரிடமும் நிலைத்து இருக்க விரும்புவதில்லை. ஒரு வண்டியின் சக்கரம் மாற்றம் பெற்றுக்கொண்டே இருப்பது போல செல்வமும் இருக்கும் இடத்தை மாற்றிக்கொண்டே இருக்கும். அதனால் செல்வர் ஏழையாகவும் ஏழை செல்வராகவும் மாறுவது உலகின் இயல்பாகும். எனவே இந்த உண்மை தத்துவத்தை உணர்ந்து அதிக செல்வம் சேர்க்க எண்ணி பாவம் செய்வதும் இருக்கும் செல்வத்தைப் பிறருக்குக் கொடுக்காமல் வாழக்கூடிய வாழ்க்கை இழிவானது மற்றும் அர்த்தமற்றது. இவ்வாறு மக்கள் செல்வத்தையோ அது தொடர்பான இன்ன பிற பொருட்களையோ சேர்த்து வைக்க முற்படுவதும். அதை ஆடம்பரமாகத் தனக்கு மட்டுமே செலவு செய்து தன்னை உயர்வாகக் காட்டிக்கொள்வதும் ஒரு விதமான உளவியல் கோளாறாகக் கருதப்படுகின்றது.

> **குழந்தைப் பருவத்தில் உருவாகும் குதமோகத் தடையானது மனிதன் வளர வளர பல திரிபுகளைப் பெற்றுப் பணம், பொருள் போன்றவற்றைச் சேர்த்து வைக்கும் பழக்கமாக உருவாகிறது. (*ஒரு ஃப்ராய்டியன் பார்வையில் தமிழ் நாட்டுப்புற வழக்காறுகள்,* பக். 172)**

இந்தப் பழக்கமானது மனிதனின் அமுக்கப்பட்ட ஆசையாக இருந்து மாற்று வடிவில் இன்ப நிறைவேற்றம் அடைய முயற்சிக்கின்றது. இந்த மனஉணர்வு சாதாரணப் பண்பாக இல்லாமல் ஒரு

விதமான உளவியல் சிக்கலைக் கொண்டதாக உள்ளது. இவ்வாறு நிலைத்தத் தன்மை அற்றதும் மனிதராலும் இயற்கையாலும் அழியக் கூடியதுமான செல்வத்தை ஒருவர் பொய்யான அல்லது தவறான நம்பிக்கையுடன் நிலையானது என்று நம்பி மேலும் சேர்த்து வைப்பது பிறழ் நம்பிக்கையின் வெளிப்பாட்டாலும் நிகழ்கிறது.

**பிறழ் நம்பிக்கை என்பது பொய்யான நிலைப்பாடுகளில் வெளிப்படும். அறிவியலாலும் நிரூபிக்க முடியாதவை மீது பற்று கொண்டு நம்பிக்கையோடு இருக்கும் மனநிலை. (*பிறழ்வு நிலை உளவியல்*. பக். 86)**

இந்த மனநிலை தான் செல்வத்தின் மீதும் அதீதப் பற்றை உருவாக்கி அதனைப் பெற எந்தச் செயலையும் செய்யலாம் என்ற மன உந்துதலை உருவாக்குகின்றது. இத்தகைய பொய்யான மன உணர்வைப் போக்கவே நாலடியாரில் உள்ள செல்வம் நிலையாமை பாடல்கள் முயற்சிக்கின்றன. எவ்வாறெனில் செல்வத்தின் நிலையற்றத் தன்மையை எடுத்துரைத்து அதனை எவ்வாறு தனக்கும் பிறருக்கும் பயனுள்ள விதத்தில் அறம் சார்ந்த செயல்களைச் செய்யலாம் என நாலடியார் பாடல்கள் உரைத்துள்ளன. மேலும் செல்வம் நிலையாமையில் உள்ள அறக்கருத்துகள் மனித மனதைப் பக்குவப்படுத்திச் செல்வத்தின் பரவலை அல்லது ஏழைகளற்ற சமூகத்தை உருவாக்க முயன்றுள்ளதாகக் கருத இடமுண்டு. இங்கு உதாரணத்திற்கு ஒரு பாடலின் கருத்து மட்டும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தில் உள்ள பிற பாடல்களும் இதே மாதிரியான போக்கிலேயே அமைந்திருப்பதை அவற்றை வாசிப்பதன் மூலம் உணரலாம்.

**இளமை நிலையாமையில் உளக்கட்டுப்பாடு**

நிலையற்ற செல்வத்தைச் சேர்த்து அதன் மூலம் பல இன்பங்களை அடைய விரும்பும் மனித மனம் அதே போல தன்னுடைய இளமையின் பொருட்டும் இன்பம் துய்க்க விரும்பி அதனால் பல பாவச் செயல்களில் ஈடுபடுகின்றது. எடுத்துக்காட்டாக, காமம் சார்ந்த செயல்பாடுகள் மது பழக்கம், வீரம் என்ற பெயரில் பிறரை வதைத்தல் அல்லது கொலைபுரிதல் போன்ற அறம் சாராச் செயல்பாடுகளைச் செய்ய மனம் ஒருவரைத் தூண்டுகிறது. இதுபோன்ற இளமைத் துள்ளல்கள் அறத்திற்குப் புறம்பானது மற்றும் நிலையற்றது என்பதை மனித சமூகத்திற்கு நாலடியாரில் உள்ள இளமை நிலையாமை என்ற அதிகாரப் பகுதி பாடல்கள் எடுத்துரைக்கின்றன. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காணலாம்.

**சொல்தளர்ந்து கோல்ஊன்றிச் சோர்ந்த நடயினராய்ப்**
**பல்கழன்று பண்டம் பழிகாறும் – இல்செறிந்து**
**காமநெறிபடறுங் கண்ணினார்க் கில்லையே**
**ஏம நெறிப்படரு மாறு. (*நாலடி*-13)**

பேச்சு ஓசை குன்றி தடியைப் பிடித்துக் கொண்டு தள்ளாடி போகும் நடையுடையவாய், பற்கள் நீங்கிப்போய் தேகமாகிய பண்டம் பழிப்பையடையும் அளவும் இல்வாழ்க்கையில் நெருங்கி இருந்து ஆசை வாழ்வில் செல்லுகின்ற அறிவுடையவருக்கு சுகமாகிய வழியில் செல்லும் வகை இல்லை. இளமையில் ஒருவர் வயது பூரிப்பு காரணமாக தேவையற்ற சொற்கள் பேசுவதும், வீர முழக்கங்கள் இடுவதும் இயல்பான நிகழ்வ அத்தகைய தருணங்களில் நாம் பிற்காலத்தில் பேசக்கூடிய சொற்கள் தளர்ந்து போகும் என்பதையும், இளமையின் உறுதி உடலில் இருக்கும் தருணத்தில் பிறரை மதிக்காமல் எவருடைய உதவியும் தனக்கு தேவையில்லை என்று ஒருவருடைய மனம் சிந்திக்கும் சூழலில் அதே நபர் பிற்காலத்தில் ஒரு கோளின் உதவியுடன் தான் நடமாட வேண்டிய நிலை உருவாகும் என்பதையும்

எண்ணி இந்த இளமை கழிந்தப் பின் வலிமையுடைய பற்களும் கழன்று இந்த உடல் பிறர் கண்டு அருவருக்கக் கூடிய நிலையையே அடையும். இதுபோன்ற உண்மைகளை எல்லாம் மக்கள் முன்னமே உணர்ந்து இந்த இளமை உடல்மீது பெருத்த மோகம் கொண்டு தீமையான செயல்கள் செய்யாமல் இருத்தல் வேண்டும் எனவும் நாலடியார் உணர்த்துகிறது. ஏனெனில் இவ்வாறு உண்மைகளை உணராமல் ஒருவர் தன்னைத்தான் மிக உயர்வாக எண்ணிக் கொள்ளுதல் தவறான நம்பிக்கை என்ற மனநோயின் வெளிப்பாடேயாகும்.

> **ஒருவர் தன்னைச் சக்தி வாய்ந்த மனிதன் என்றும் தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்றும் எண்ணுவது தவறான உயர் எண்ணத்தின் வெளிப்பாடாக கருதப்படுகிறது. இத்தகைய மனநோய் உள்ளோரின் சிந்தனை அவரது அறிவிற்கும் அனுபவத்திற்கும் பொருத்தமற்றதாகவும் இருக்கும். (*மனநோயும் இன்றைய மருத்துவமும்*. பக். 37)**

இத்தகைய மனநோயானது மக்கள் மனதில் இருந்து கொண்டு அவர்களை அறத்திற்கு புறம்பான செயல்களை செய்யத் தூண்டுகின்றது. இதனை இயன்ற அளவு தவிர்க்கவே நாலடியாரில் உள்ள பாடல்கள் இளமை என்பதும் கூட நிலைபெற்று இருப்பதன்று. விரைவில் மாறக்கூடிய தன்மை உடையது. குறிப்பாக இளமை கழிந்த பின் ஒருவருடைய நிலை தாழ்வுற்று போகும் என்பதை மக்கள் மனதிற்கு அறிவுறுத்தி மனநோய்க்கு மருந்தளிக்க இளமை நிலையாமை அதிகார பாடல்கள் முயன்றுள்ளன.

**யாக்கை நிலையாமையில் உளக்கட்டுப்பாடு**

நாலடியார் பாடலானது செல்வத்தின் நிலையற்ற தன்மையையும் இளமையின் நீடிப்பற்ற நிலையையும் உரைப்பது போன்ற யாக்கை அதாவது உடலின் நிலையற்ற இருப்பையும் கூறி மனித மனம் அதன் வழியே பாவச்செயல்களில் ஈடுபடுவதைத் தடுத்திட யாக்கை நிலையாமை பற்றிய கருத்துக்களை உரைத்துள்ளது. யாக்கை நிலையாமை அதிகாரத்தில் உடல் நிலையாமையோடு சேர்த்து உயிர் நிலையாமையும் குறிப்பிடப்படுகின்றது. எனினும் உடல் என்ற கருவியின் மூலமே பாவங்கள் நிகழ்த்தப்படுவதனால் இந்த அதிகாரத் தலைப்பிலும் பாடல்களின் பெரும்பான்மை இடங்களிலும் உடலின் நிலையாமையே பேசப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் உடல் நிலையற்றுப் போனால் உயிரும் நிலையற்றுப் போனதாகவே அர்த்தம். எனவே இரண்டையும் வேறுபடுத்திக் காண வேண்டியதில்லை. இந்த உடல் மற்றும் உயிர் நிலையாமையை மனிதனுடைய மனதிற்கு உரைத்து இவற்றைப் பயன்படுத்தி பாவச்செயல்கள் செய்யாமல் அவை அழிவதற்குள்ளாக இயன்ற அளவு அறங்களைச் செய்யுங்கள் என மக்களுக்கு நாலடியார் உரைத்துள்ளது.

> **கணம்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்**
> **பிணம்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும் மணங் கொண்டீன்**
> **உண்டுண்டுண் டெண்ணும் உணர்வினார் சாற்றுமே**
> **டொண்டொண்டோ டென்னும் பறை (*நாலடி*. 25)**

கூட்டங் கொண்டு உறவினர் கவீரென்று கூவி அழப் பிணத்தைத் தூக்கிக் கொண்டு சுடுகாட்டில் இடுபவரைப் பார்த்துக் கலியானஞ் செய்து கொண்டு இவ்வுலகில் நிச்சயமாய் சுகமுண்டு சுகமுண்டு சுகமுண்டு என்கிற அறிவுள்ளவனைக் குறித்துத் தொன் தொன் தொன் என்கிற வகையாய் ஒலிக்கிற பிணப் பறையானது இல்வாழ்க்கை இவ்வகையது என்று சொல்லும். ஒருவர் உடலினின்று உயிர் நீங்கிய பின் ஒருவரது உடலை இடுகாட்டில் கொண்டு போய் எரித்து உறவினர் அழும் நிலையில் இந்த

உடலினுடைய நிலையற்றத் தன்மையைப் பறையானது தனது இசையின் மூலம் இந்த உலக மக்களுக்கு அறிவுறுத்துகின்றது. அதன் பிறகும் மக்கள் இந்த உலக வாழ்வின் மீது போதை கொண்டு மேலும் இன்பம் அடைய விரும்புகின்றனர். இத்தகைய விருப்பத்தையுடைய மனித மனதிற்கு இந்த உடலினுடைய இருத்தல் என்பது நிலையில்லாதது என்பதை அறிவுறுத்தி மனிதன் தன்னுடைய உடலின் மீது அதீத மோகம் கொள்வதும் அதனைக் கொண்டு பாவம் செய்வதையும் தவிர்க்க வேண்டும் என இந்தப் பாடல் உரைக்கின்றது.

குறிப்பாக மனிதனுடைய மனதில் தன்மோக உணர்வும் தான், தனக்கு என்ற சுயநல உணர்வும் இருந்து கொண்டு ஒருவரைப் பலவிதமான பாவச் செயல்களில் ஈடுபடத் தூண்டுகிறது. அந்தச் சூழலில் உலக வாழ்வின் நிலையற்றத் தன்மையைக் கூறி மனதில் இருக்கக்கூடிய தற்காப்பு உணர்ச்சியைத் தூண்டுவதன் மூலம் மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுவான். அந்தத் தருணத்தில் மனித மனம் தீமை செய்வதை விடுத்து அறம் செய்ய முற்படும் என்ற நோக்கத்திலேயே யாக்கை நிலையாமை உரைக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது.

> **மனித மனதில் உள்ள தற்காப்புச் செயல் என்பது ஒருவருடைய சுதந்திரத்தை வரம்புக்குள் கொண்டு வருவதையும் வேட்கைகள் அதாவது விருப்பங்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதுமேயாகும். இந்தப் பணி மனதில் உள்ள நனவு மனம் செய்யக்கூடிய தற்காப்பு நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. (*சிக்மண்ட ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்*, பக். 336)**

இவ்வாறு மனித மனமானது தன்னைக் காத்துக் கொள்ள எடுக்கும் முயற்சியின் விளைவாகத் தன்னுடைய அதீத சுதந்திர வேட்கையையும் பேராசை உணர்வுகளையும் கட்டுப்படுத்தித் தேவையற்ற, குறிப்பாகச் சமூக அறத்திற்குப் புறம்பான செயல்களைத் தவிர்க்க முற்படும். இத்தகைய அடிப்படை நிலைப்பாடு நாலடியாரின் முதல் மூன்று அதிகாரங்களான செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை முதலான அதிகாரக் கருத்துக்களில் அமைந்துள்ளன. எவ்வாறெனில் செல்வம் சேர்ப்பது பொருட்டும் அது தொடர்பான இன்ன பிற பொருள்களை அடைவது பொருட்டும் மனிதன் ஓடோடி பாவச் செயல்களில் ஈடுபடுகின்றான். அடுத்துத் தன்னுடைய இளமை மற்றும் உடல் சார்ந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் அறம் செய்வதைத் தவிர்த்துப் பொய்யான இன்பத்தைத் தேடி அலைகின்றான். இவ்வாறு அறம் செய்யாமல் தன்னுடைய சுயநலத்தை மட்டுமே கருத்தில் கொண்டு மக்கள் தீமையானவற்றை செய்து வாழக்கூடாது என்பதை முதல் மூன்று அதிகாரங்களும் விளக்கியுள்ளன.

மனித மனத்திற்கு நிலையாமை உரைக்கக் காரணம் அவன் எதையெல்லாம் நிலையானது என நம்புகின்றானோ அதன் நிலையற்ற தன்மையை உரைக்கும் போது இந்த அறத்தை ஏற்றுக்கொள்ளும் மனம் நான் என்னுடைய சுயநலத்திற்காக பெரும்பாவங்களில் ஈடுபடக்கூடாது எனத் தனக்குள் அறிவுறுத்திக் கொள்ளும். இத்தகைய உளப் புரிதலின் அடிப்படை நாலடியார் பாடல்களில் வெளிப்படுகின்றது. ஒருவருடைய மனம் நிலையாமை கருத்துக்களை நன்கு உள்வாங்கிக் கொண்டால் அதன் பின்பும் அவருடைய மனம் தான் தீமையானவற்றை செய்யாமல் இருப்பதற்கான கற்பித்தலைத் தனக்குள் உரைத்துக் கொண்டு தற்காப்பு என்ற உணர்வின் மூலம் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளும். இத்தகைய மனக்கட்டுபாடு நிலையானது இழிவான ஆசைகள் மேல் எழும்போது அதனைத் தடுத்து இந்தச் சமூகம் கற்பித்த அறத்தினை மேலோங்கச் செய்து மனதில் உள்ள மிருக உணர்ச்சிகளைத் தடை

செய்யும். இந்தக் கட்டுப்பாடுதான் மனிதனைத் தீமைகளிலிருந்து திருப்பி நன்மையின் பக்கம் வழிநடத்துகின்றது.

**முடிவுரை**

மனிதனுடைய மனதிற்கு நிலையாமை என்ற தத்துவார்த்த உண்மையை உரைப்பது என்பது அவனுடைய மனதில் உள்ள பண்பாட்டு உணர்வைத் தூண்டிவிட்டு அதன் வாயிலாக அறம் சார்ந்த வாழ்வின் பக்கம் உந்துவதாகும். இந்தத் தருணத்தில் மனித மனதிற்குள் ஒருவிதமான மனப் போராட்டம் உருவாகும். அந்தப் போராட்டத்தின் போது மனிதனின் இயல்பான ஆசைகளுக்கும் பண்பாடு கற்பிக்கும் ஒழுக்க நெறிக்கும் ஒரு விதமான முரண்பாடு தோன்றும். அந்தச் சூழலில் தனக்கும் தன் வாழ்க்கைக்கும் எது நன்மையை அளிக்கும் என்பதை மனமானது சிந்தித்து முடிவெடுக்கும். இத்தகைய சிந்திக்கும் போக்கையும் மனம் தொடர்பான புரிதலோடு சிறந்த வழிகாட்டலையும் நாலடியார் பாடலின் நிலையாமை தத்துவம் உரைத்துள்ளது. குறிப்பாக மனித மனதில் உள்ள பலவீனத்தைப் புரிந்துகொண்டு அதனைச் சரி செய்யும் விதமாகவும், உள்ளத்தைத் தூண்டக்கூடிய பேராசை உணர்வுகளை மனித சமூகம் கட்டுப்படுத்த வேண்டியதற்கான அவசியத்தையும், நாலடியாரில் உள்ள நிலையாமை தத்துவப் பாடல்கள் உரைக்கின்றன.

**துணை நூற்பட்டியல்**

[1] இரவிச்சந்திரன். தி.கு., *சிக்மண்ட் ப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்*. அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2007.
[2] இரவிச்சந்திரன். தி.கு., *ஒரு ஃப்ராய்டியன் பார்வையில் தமிழ் நாட்டுப்புற வழக்காறுகள்*. அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2011.
[3] சோமசுந்தரம். ஒ. டாக்டர், ஜெயராம கிருஷ்ணன். தி. டாக்டர். *மனநோயும் இன்றைய மருத்துவமும்*. நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை, 2017.
[4] *நாலடியார்* - மூலமும் உரையும். சாரதா பதிப்பகம், சென்னை, 2006.
[5] *பிறழ்வு நிலை உளவியல்*. காவ்யா வெளியீடு, சென்னை, 2018.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.